DEPOSITION OF WITNESS
IN THE I ADDITIONAL DISTRICT COURT (PCR),
TIRUCHIRAPPALLI.
**Spl.S.C.No. 43/2025**
**P.W. 10**

| | | |
|---|---|---|
| Name | : | திரு. முத்துசாமி |
| Father's Name | : | திரு. நல்லையகவுண்டர் |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | 54 |

(Accused 1 to 10 are present)

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 4th day of June 2026.

**முதல் விசாரணை**

நான தற்போது திருச்சி மாவட்டம் சிறுகனூர் காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணியில் இருக்கிறேன். கடந்த 07.09.2024 ம் தேதி புத்தாநத்தம் காவல் நிலையத்தில் திரு. விஜயாலயன், உதவி ஆய்வாளராக நிலைய பொறுப்பில் இருந்த போது அஜித்குமார், த/பெ பொன்னுசாமி என்பவர் கொடுத்த புகாரைப் பெற்று அதன் தன்மைப்படி நிலைய குற்ற எண். 142/2024, U/s 296(b), 351(2), 115(2) BNS ன் படி வழக்கை பதிவு செய்துள்ளார். திரு. விஜயாலயன் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கை **அ.சா.ஆ.6** ஆகும்.

திரு. விஜயாலயன் இந்த வழக்கை தனது விசாரணைக்கு எடுத்துக் கொண்டு சம்பவ இடம் சென்று சாட்சிகள் பால்ராஜ் மற்றும் சத்தியராஜ் ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தைப் பார்வையிட்டு சம்பவ இடத்தை குறிக்கக்கூடிய பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயாரித்துள்ளார். அந்த மாதிரி வரைபடம் **அ.சா.ஆ.7** ஆகும். திரு. விஜயாலயன் பணிக்கு திரும்பாமல் இருந்து வருகிறார்.

கடந்த 19.09.2024 ம் தேதி நான் புத்தாநத்தம் காவல் நிலையத்தில் இருந்த போது நிகழ்நிலைப் புகார்தாரர் அஜித்குமார் என்னிடம் கொடுத்த புகாரை பார்வையிட்டதில் இருந்தும், அவரை விசாரணை செய்ததில் இருந்தும், அவர்

பட்டியல் வகுப்பைச் சேர்ந்தவர் என்பதும் எதிரிகள் அனைவரும் பட்டியல் வகுப்பைச் சாராதவர்கள் என்பதும் தெரிய வந்ததால் வழக்கின் சட்டப்பிரிவுகள் U/s 296(b), 351(2), 115(2) BNS ஆக இருந்ததை U/s 296(b), 351(2), 115(2) BNS r/w U/s 3(1)(r), 3(1)(s), 3(2)(va) of SC/ST Act ஆக மாறுதல் செய்து சட்டப்பிரிவு மாற்றறிக்கையை இந்நீதிமன்றத்திற்கும் தகுந்த புலன் விசாரணை அதிகாரியை நியமிக்க வேண்டி திருச்சி மாவட்ட காவல் கண்காணிப்பாளருக்கும், அனுப்பி வைத்தேன். அந்த சட்டப்பிரிவு மாற்றறிக்கை **அ.சா.ஆ.8** ஆகும். சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கைக்கு பிறகு மணப்பாறை நீதித்துறை நடுவர் அவர்களுக்கு அசல் முதல் தகவல் அறிக்கை மற்றும் விசாரணை ஆவணங்களை இந்நீதிமன்றத்திற்கு அனுப்பி வைக்க வேண்டுகோள் கடிதம் கொடுத்தேன். காவல் துணை கண்காணப்பாளர் என்னை விசாரணை செய்தார்.

**<u>குறுக்கு விசாரணை</u>**

வழக்கு சம்பவமானது கடந்த 06.09.2024 அன்று மாலை 16.35 மணிக்கு நடந்தது. அஜித் குமார் புகார் மனுவை 07.09.2024 அன்று காலை 11:30 மணிக்கு கொடுத்திருக்கிறார். சம்பவ இடத்திற்கும், காவல் நிலையத்திற்கும் இடைப்பட்ட தூரம் சுமார் ஆறு கிலோமீட்டர் இருக்கும். சம்பவ இடத்தில் இருந்து காவல் நிலையத்திற்கு சுமார் அரை மணி நேரத்தில் வந்துவிட முடியும். அ.சா.1 அஜித்குமார் 12 மணி நேரம் காலதாமதமாக காவல் நிலையம் வந்து புகார் கொடுத்து இருக்கிறார் என்றால் சரிதான். காலதாமதம் குறித்து நான் அவரிடம் எந்த ஒரு விளக்கமும் கேட்கவில்லை என்றால் சரியல்ல. காலதாமதம் குறித்து நான் தனி அறிக்கை தாக்கல் செய்து இருக்கிறேனா என்றால் இல்லை. அ.சா.1 அஜித் குமார் கொடுத்த புகார் மனுவில் பெருமாள் மற்றும் 18 நபர்கள் தன்னை தாக்கியதாக கூறியிருக்கிறார் என்றால் சரிதான். அஜித் குமார் கொடுத்த புகார் மனுவில் சம்பவமானது பேக்கரி கடைக்கு உள்ளே டீ குடித்துக் கொண்டு இருக்கும் போது நடைபெற்றதாக கூறியிருக்கிறார் என்றால் சரிதான். 19.09.2024 அன்று இரண்டாவது முறையாக அஜித்குமார் என்னிடம் வந்து புகார் கொடுத்தார். அஜித் குமார் இரண்டாவது முறையாக கொடுத்த புகார் மனுவில் பேக்கரி கடைக்கு வெளியே இருசக்கர வாகனத்தில் உட்கார்ந்து இருந்து கொண்டு இருந்தபோது பார்த்தால் அடையாளம் தெரியக்கூடிய நபர்கள் வந்து தன்னை தாக்கியதாக கூறியிருக்கிறார் என்றால் சரிதான். மாதிரி வரைபடம் மற்றும் பார்வை மகஜரில் சம்பவம் ஆனது பேக்கரி கடைக்கும், பஸ் ஸ்டாப்பிற்கும் இடையில் நடைபெற்றதாக குறிப்பிடப்பட்டு இருக்கிறது என்றால் சரிதான். அ.சா.1 அஜித்குமாரும், எதிரிகளும் வெவ்வேறு ஊர்களை சேர்ந்தவர்கள்

Arun

என்றால் சரிதான். சம்பவத்திற்கு முன்பு இரு தரப்பினருக்கும் இடையில் எந்த வித அறிமுகமும் இல்லை என்றால் சரிதான். அ.சா.1 அஜித்குமாருக்கும், எதிரிகளுக்கும் இடையில் அவர்கள் எந்தெந்த சாதிகளை சேர்ந்தவர்கள் என்பது தெரியாது என்றால் சரியல்ல. அஜித் குமாருக்கு தன்னை தாக்கிய நபர்கள் எந்த சாதியை சேர்ந்தவர்கள் என்று தெரியாத காரணத்தினால் தான் ஆஜர் எதிரிகள் மீது பொய்யாக புகார் கொடுத்திருக்கிறார் என்றால் சரியல்ல. முதல் எதிரி பட்டியல் வகுப்பைச் சேர்ந்தவர் என்றால் நான் இந்த வழக்கின் புலன் விசாரணை அதிகாரி இல்லை. எதிரிகளுக்கும் வழக்கிற்கும் எந்தவித சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை</u> – இல்லை.**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி மற்றும் அவரது வழக்கறிஞர் முன்னிலையில் சாட்சியின் வாக்குமூலம் என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் கணினியில் வடிவாக்கப்பட்டு, சாட்சியிடம் படித்து காட்டப்பட்டு விளக்கிக் கூறப்பட்டு சாட்சியால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு கைரேகை/கையொப்பம் செய்யப்பட்டது.

(ஒம்.).XXXXX,

முதலாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,

திருச்சிராப்பள்ளி.